[20th March 1964

Scarcity of sugar

*344 Q.—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Food be pleased to state the reasons for the scarcity of sugar in the State at present and the steps taken to ensure adequate supply of sugar for the use of the public?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: A statement[a] is placed on the Table of the House.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : சர்க்கரை கட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தினால்தான் சர்க்கரையை உடனுக்குடன் வாங்கிக் கொள்ளலாம் என்றிருப்பவர்கள் கூட கட்டுப்பாடு வந்ததற்குப் பிறகு சற்று அதிகமாகவே வாங்கி வைத்துக் கொள்ளலாம் என்ற நிலை ஏற்பட்ட பிறகுதான் இந்த பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது என்று கருதுகிறேன். எனவே அந்தக் கட்டுப்பாட்டை நீக்குவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : கட்டுப்பாட்டை நீக்குவதெல்லாம் மத்திய சர்க்காரிலிருந்து நமக்கு கொடுக்கிற சர்க்கரையை வைத்துத்தான் சொல்லவேண்டும். அவர்கள் அபிப்பிராயத்தைப் பொறுத்துதான் கட்டுப்பாட்டைப் பொறுத்து சொல்லலாம். அங்கத்தினர் சொன்ன அந்தலிதமான தகவல் என்னிடம் இல்லை.

Krishna water for Madras

*345 Q.—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state the present stage of the scheme to take water from the river Krishna to meet the requirements of drinking water for the Madras City?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: The matter is still under consideration of the Government.

திரு. இரா. நெடுஞ்செழியன் : காவேரி ஆற்றிலிருந்து நீரை சென்னை நகருக்குக் கொண்டு வர ஒரு திட்டம் இருந்ததே, அது எந்த அளவில் இருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பப்ளிக் ஹெல்த் சீப் என்ஜினியர் ரெக்கமெண்ட் செய்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. வீராணம் டாங்கில் அந்த ஸிஸ்டம்படி கொண்டு வர ஏற்பாடு இருக்கிறது.

திருமதி சி. குழந்தையம்மாள் : கிருஷ்ணு கோதாவரி கமிஷன் செய்திருக்கிற சிபார்சுகள் என்ன என்று இந்த சபை அறியலாமா ? மத்திய சர்க்கார் அதற்கு எந்தளவு ஒத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் இங்கு சமர்ப்பிப்பார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அத்தகவல் இப்போது கூறுவதற்கில்லை.

திரு. முனு. ஆதி : காவேரியில் இருந்து குடி நீர் சென்னை நகருக்கு கொண்டு வரும் திட்டத்தில் இடையே உள்ள நகரங்களுக்கும் குடி நீர் வசதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : காவேரி வாட்டர் சப்ளை வந்தால் 40 மிலியன் காலன் அளவு சென்னைக்கு சப்ளை செய்வதற்குத்தான் சீப் எஞ்சினியர் ரெக்கமெண்டேஷனில் கூறியிருக்கிறார்கள். இன்வெஸ்டிகேஷன் முடிந்த பிறகுதான் வழியில் உள்ள கிராமங்களுக்கு வருமா வராதா என்று கூற முடியும்.

---

a Printed as Appendix III on pages 456–457